செய்தி வெளியீடு எண்:407 நாள் :30.07.2013

# <u>செய்தி வெளியீடு</u>

<u>நீதியரசர் எஸ். ஆர். சிங்காரவேலு</u>

<u>விசாரணைகுழு, 2 ஆம் தளம், மாநில திட்ட இயக்ககம், DPI வளாகம், சென்னை 6</u>

தர்மபுரி மாவட்டம் (அதியமான்கோட்டை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட) நத்தம் காலனியைச் சேர்ந்த திரு.பி. இளங்கோ என்பவரது 20 வயதுள்ள மகன் திரு. இ. இளவரசன் 04.07.2013 அன்று தர்மபுரி அரசு கலைக் கல்லூரி பின்புறத்தில் இரயில் பாதையில் இறந்து கிடந்ததற்கான காரணம் மற்றும் அதற்கான சூழ்நிலைகள் குறித்து தமிழக அரசால் நியமனம் செய்யப்பட்ட **நீதியரசர் எஸ்.ஆர். சிங்காரவேலு** தனிநபர் விசாரணை குழு, மேற்படி சம்பங்கள் தொடர்பான விவரங்கள் அடங்கிய உறுதிமொழிப் பத்திரங்களை (Affidavits) அனுப்புவதற்கான இறுதி தேதியை மேலும் 07.08.2013 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்படுகிறது.

நீதியரசர் 08.08.2013 (வியாழக்கிழமை) அன்று காலை 11 மணியளவில் தர்மபுரி அரசு விருந்தினர் மாளிகையில் தனது முதன்மை அமர்வை நடத்துவார். அப்போது பொதுமக்களும், வழக்கறிஞர்களும், மாவட்ட வருவாய் மற்றும் காவல் அலுவலர்களும் பங்கேற்கலாம் என அறிவிக்கப்படுகிறது.

வெளியீடு:

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9